**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.165/2022**

03.03.2026

**D.W.2- காசிமாயன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதி எனது இளைய சகோதரி என்றால் சரிதான். நான் தான் எனது குடும்பத்தில் மூத்தப்பிள்ளை என்றால் சரிதான். எனது தாயார் வாதி வசம் இருந்தார் என்றால் சரியல்ல. எனது பராமரிப்பில் இருந்தார். எனது தாயாருக்கு வாதிக்கு சொத்தில் பங்கு கொடுக்க முழு விருப்பம் உள்ளது என்றால் சரியல்ல. எனது தாயார் இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 19.11.1976ம் தேதியில் பாகவிஸ்தி மூலம் தாவா சொத்து கிடைத்துள்ளது என்றால் சரிதான். 9 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 4, 7வது இலக்க சொத்தை எனது தாயார் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 3, 6, 9 இலக்க சொத்துக்கள் எனது தந்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நாங்கள் பாகப்பிரிவினை செய்யும் போது வாதி சென்னையில் இருந்தார். எனது சகோதரி பார் நடத்துவதற்கு சகோதர்களுக்கு 30 பவுன் நகைகள் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் 30 பவுன் நகைகளை மோசடி செய்தும், பூர்வீக சொத்தில் பங்கு கொடுக்காமலும் மோசடி செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1/5 பங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. எனது தாயாரை விசாரிக்க தயாராக உள்ளேன். நடக்க முடியாது என்பதால் விசாரிக்க முடியாது.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.03 17:56:01 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.